இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 01.09.2026

# பொய்யிலே பிறந்து ... பொய்யிலே புரண்டு...

'சொன்னது எதையும் செய்ய மாட்டேன்' என்று சபதம் எடுத்துள்ளார் முதலமைச்சர் விஜய். கொடுத்த வாக்குறுதிகளை அவர் மறந்து விட்டார். நினைவுக்கு வந்த ஒருசில வாக்குறுதிகளை அரைகுறையாக நிறைவேற்றுகிறார். பொய்யிலே பிறந்த அவரது ஆட்சி பொய்யிலே புரண்டு கொண்டு இருக்கிறது.

'நான் வாக்குறுதி கொடுத்தால் அனைவருக்கும் கொடுப்பேன். தி.மு.க.மாதிரி அதில் அளவுகோல் வைத்து, அவர்களுக்கு கிடையாது, இவர்களுக்கு கிடைக்காது என்று சொல்ல மாட்டேன்' என்று வாய்க்கு வந்த படி உளறினார். தேர்தல் முடிந்து, ஆட்சிக்கு வந்த பிறகு அவர் செய்வது அனைத்தும் முழுமையானது அல்ல. அரைகுறையானது தான்.

**★ அனைவருக்கும் 6 சிலிண்டர் இலவசம் என்று சொன்னார் விஜய். 'ஒவ்வொரு குடும்பத்துக்கும்' என்று சொன்னார் விஜய். இப்போது 3 சிலிண்டர் தான் தரப்போவதாகச் சொல்கிறார். அதுவும் ஆண்டு வருமானம் 2.5 லட்சம் ரூபாய்க்குள் இருப்பவர்களுக்கு மட்டுமே சிலிண்டர் கிடைக்குமாம். அதாவது மாதம் 20 ஆயிரம் ஊதியம் வாங்குகிறவர்களுக்கு மட்டும்தான் 3 சிலிண்டராம். 'அன்னபூரணி சூப்பர் சிக்ஸ்' திட்டம் என்பது, 'அன்னபூரணி சூப்பர் மூன்று' ஆகிவிட்டது.**

**★ அனைவருக்கும் 200 யூனிட் மின்சாரம் இலவசம் என்று தேர்தலுக்கு முன்னதாகச் சொன்னார் விஜய். 500 யூனிட் வரை பயன்படுத்துவோருக்கு மட்டுமே 200 யூனிட் மின்சாரம் இலவசம் என்று முதலமைச்சர் ஆனதும் அறிவித்திருக்கிறார் விஜய்.**

**★ அனைத்து விவசாயிகளுக்கும் அவர்கள் வாங்கிய பயிர்க்கடன் முழுமையாக ரத்து செய்யப்படும் என்று தேர்தலுக்கு முன்னதாகச் சொன்னார் விஜய். இப்போது அதிலும் அரைகுறையான அறிவிப்பு தான். 50 ஆயிரம் வரை தள்ளுபடி என்றார். அடுத்து 70 ஆயிரம் வரை தள்ளுபடி என்றார்.**

**★ மகளிருக்கு தமிழ்நாடு முழுவதும் கட்டணமில்லாப் பயணம் என்று தேர்தலுக்கு முன்னதாகச் சொன்னார் விஜய். மாநகர, நகரப் பேருந்துகளில் மட்டுமே கட்டணமில்லாப் பயணம் என்று இப்போது அறிவித்துள்ளார்.**

**★ முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் தொகை 5 லட்சத்தில் இருந்து 25 லட்சமாக உயரும் என்று பரபரப்பாக அறிவித்தார். ஆண்டு வருமானம் 1.20 லட்சம் தான் இருக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். அதாவது குடும்பத்தின் மாத வருமானம் 10 ஆயிரத்துக்கு குறைவாக இருந்தால்தான் இதில் பங்கெடுக்க முடியும்.**

**★ பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் தங்க மோதிரம் என்று அறிவித்தார் விஜய். இப்போது அரசாங்க மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகளுக்கு மட்டும்தான் என்று அறிவித்துள்ளார் விஜய்.**

"தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம். உலகத்துல மனுஷனா பிறக்கிறதே பெரிய விஷயம். அதுவும் நம்ம தாய்நாடான தமிழ்நாட்டுல பிறக்கிறது மிகப்பெரிய வரம். அப்படி நம்ம தமிழ்நாட்டுல பிறக்கிற குழந்தைகளை வரவேற்கிற திட்டம்தான் தாய்மாமன் தங்கமோதிரம் திட்டம். தமிழ்நாட்டில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் அரசாங்கத்தின் ஆசீர்வாதமாக ஒரு தங்கமோதிரம் வழங்கப்படும். கூடவே ஒரு பேபி வெல்கம் கிட்டும் வழங்கப்படும்." என்றார். இப்போது அரசாங்க மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகளுக்கு மட்டும் என்று சொல்வது மோசடி அல்லவா?

தான் எவ்வளவு பெரிய பொய்யர் என்பதை தினந்தோறும் மெய்ப்பித்துக் கொண்டு வருகிறார் முதலமைச்சர் விஜய்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பெண்களுக்கும் மாதந்தோறும் 2,500 ரூபாய் தருவோம் என்றவர் அவர். பெண்கள் திருமணத்துக்கு ஒரு பவுன் தங்கமும், பட்டுச்சேலையும் வழங்குவோம் என்றவர் அவர். மாணவர்களின் இடைநிற்றலைத் தடுக்க பெற்றோருக்கு 15 ஆயிரம் தருவேன் என்றவர் அவர்.

'மற்றவர்களை மாதிரி அடித்துவிட்ட மாட்டோம். நிறைவேற்ற முடிந்த வாக்குறுதியைத்தான் சொல்வோம்' என்றார் விஜய். ஏன் அவரால் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியவில்லை. நிறைவேற்றுவதற்காக ஏதாவது முயற்சி எடுத்தாரா? இல்லை.

**தேர்தல் வாக்குறுதிகளில் அறிவித்த நெல் குவிண்டாலுக்கு 3,500, கரும்பு டன்னுக்கு 4,500 விலை தருவேன் என்பது அறிவிக்கப்படவில்லை. தூய்மைப் பணியாளர்கள் பிரச்சினையைத் தீர்ப்பேன் என்றார். தினமும் அவர்கள் போராடி வருகிறார்கள். 'அண்ணனை எங்கே காணோம்' என்று கேட்கிறார்கள் தூய்மைப் பணியாளர்கள். 'அடுத்த பிறவியில் விவசாயியாக பிறப்பேன்' என்று சொன்னவர் இந்த பிறவியில் விவசாயிகளை வேட்டையாடிக் கொண்டு இருக்கிறார்.**

**முதலமைச்சர் விஜய்க்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. அவரால் வீட்டிலும் இருக்க முடியவில்லை. தலைமைச் செயலகத்திலும் இருக்க முடியவில்லை. சட்டசபையிலும் இருக்க முடியவில்லை. ஜெயிலுக்கும் போலீஸ் ஸ்டேஷனுக்குமாக அலைகிறார்? என்னதான் ஆய்வு பண்ணுகிறாரோ?**

●●

## சதுரங்க வேட்டை பாணியில்

# மதுரை, திண்டுக்கல், சிவகங்கையில் கோடிக்கணக்கில் மோசடி! பொதுமக்கள் புகார்!

மதுரை, செப். 1–

சதுரங்கவேட்டை திரைப்பட பாணியில் மதுரை, திண்டுக்கல், சிவகங்கை உள்ளிட்ட தென் மாவட்ட மக்களை குறிவைத்து மிகப்பெரிய அளவில் மோசடி அரங்கேறியுள்ளது. FQL ஆன்லைன் செயலி மூலம் பல்லாயிரம் கோடி ரூபாய் முறைகேடு நடந்திருப்பதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

FQL Trading Wallet என்ற ஆன்லைன் செயலி மூலம் கிரிப்டோ கரன்சி வர்த்தகத்தில் முதலீடு செய்தால் 45 நாட்களில் பணம் இரட்டிப்பாகும், தினசரி அதிக லாபம் கிடைக்கும் என ஆசை வார்த்தை கூறி பொதுமக்களிடம் கோடிக்கணக்கில் நிதி மோசடி செய்யப்பட்டுள்ளது. நிதி மோசடியில் பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்து புகார் பெறுவதற்காக, மதுரை மேலூர் பகுதியில் 3 இடங்களில் காவல்துறை சார்பாக சிறப்பு முகாம் அமைக்கப்பட்டுள்ளது. மதுரை மாவட்டத்தில் மட்டும் இது வரை 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புகார் மனுக்கள் பெறப்பட்டுள்ளன.

இதனிடையே, கட்டையம்பட்டி கிராமத்தில் FQLன் முக்கிய ஏஜெண்டாக செயல்பட்ட ரஞ்சித் என்பவரின் வீட்டை பாதிக்கப்பட்ட மக்கள் சூறையாடினர்.



**வெற்றிகளால் அடக்கத்தையும் தோல்விகளால் ஊக்கத்தையும் பெறக்கூடியவர்களுக்கு வீழ்ச்சி என்பது எப்போதுமே இல்லை!**

**- முத்தமிழறிஞர் கலைஞர்**



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (30–08–2026) சென்னை, ஐ.டி.சி. கிராண்ட் சோழாவில் நடைபெற்ற தே.மு.தி.க. பொருளாளர் எல்.கே.சுதீஷ் எம்.பி.யின் மகள் திருமண நிச்சயதார்த்த நிகழ்வில் கலந்துகொண்டு டாக்டர் ஜானுஸ்ரீ சுதீஷ் மற்றும் அகில் ரவிக்குமார் ஆகியோரை வாழ்த்தினார். தே.மு.தி.க. பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் எம்.எல்.ஏ., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர் செல்வப்பெருந்தகை, முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் உடனிருந்தனர்.

## திருவண்ணாமலை மலைஅடிவாரப் பகுதியில்

# 1535 வீடுகளை அகற்றும் நடவடிக்கைக்கு நீதிமன்றம் மூலம் தடையாணை பெற முயற்சி!

## முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு தகவல்!

திருவண்ணாமலை, செப். 1-

திருவண்ணாமலை மலைஅடிவாரப் பகுதியில் 1535 வீடுகள் அகற்றும் நடவடிக்கைக்கு நீதிமன்றம் மூலம் தடையாணை பெற முயற்சிகள் எடுத்து வருகிறோம் என்று அண்ணாமலையார் மலைஅடிவார குடியிருப்போர் நலச் சங்க ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது, முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் குறிப்பிட்டார்.

29.8.2026 - சனிக்கிழமை மாலை திருவண்ணாமலை பெரியத் தெருவில், அண்ணாமலையார் மலைஅடிவார குடியிருப்போர் நலச் சங்க ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

ஆலோசனைக் கூட்டத்திற்கு குடியிருப்போர் நலச் சங்க சட்ட ஆலோசகர் வழக்கறிஞர் அ.அருள்குமரன் தலைமை வகித்தார்.

குடியிருப்போர் நலச் சங்க நிர்வாகிகள் மெட்ராஸ் கே.சுப்பிரமணி, க. பிரகாஷ், எஸ்.கே.டி. வீரா, கி.சரவண குமார், முருகன், அருள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

குடியிருப்போர் நலச் சங்கத் தலைவர் அ.திவாகர் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு, முன்னாள் அமைச்சரும், சட்டமன்றக் கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள் கலந்து கொண்டு, ஆலோசனைகள் வழங்கி உரையாற்றினார். அவர் உரையாற்றியபோது...

திருவண்ணாமலை புகழ்மிக்க ஆன்மீக நகரம், ஆனால், இந்த நகருக்கு 25 ஆண்டுகளுக்கு முன்பு ஆபத்து வந்தது. மத்தியில் பாஜக ஆட்சியில் இருந்த காலத்தில் அண்ணாமலையார் கோவிலை தொல்லியல் துறை கையகப்படுத்த முயற்சித்தது. அதை தடுத்து நிறுத்த வேண்டும் என மக்கள் கோரிக்கை வைத்தனர். வியாபாரிகள் போராட்டம் நடத்தினர். தேர்தல் பிரச்சாரத்திற்கு இங்கு வந்த கலைஞரிடம் நேரில் முறையிட்டனர். தொடர்ந்து, மத்தியில் ஆட்சியில் மாற்றம் ஏற்பட்டது. உடனே, எங்களை டெல்லிக்கு அனுப்பிய கலைஞர், தொல்லியல் துறை அண்ணாமலையார் கோவிலை கையகப்படுத்தும் நடவடிக்கையை திரும்ப பெற வைத்தார்.

ஆனால், திருவண்ணாமலை கோவிலில் இன்றைக்கு ஆன்மீகபெருமக்கள் அதிகளவில் வரும் நிலை உருவாகியிருக்கிறது. பக்தர்கள் வருகையால், மாநகரின் வியாபாரம் பெருகியிருக்கிறது. பொருளாதாரம் வளர்ந்திருக்கிறது.

திருக்கோவில் இங்கு இருப்பதால்தான், ஆன்மீக கடனை செலுத்துவதற்காக இங்கு வருகின்றனர். அதனால், ஓட்டல் தங்கும் விடுதிகள், ஆட்டோக்கள் என பல்வேறு தரப்பினருக்கும் பொருளாதார பயன் கிடைக்கும் நிலை ஏற்பட்டிருகிறது.

திருவண்ணாமலைக்கு சம்மந்தப்படாத யானை இராஜேந்திரன் எனும் வழக்கறிஞர், திருவண்ணா மலை ஆன்மீகமான மலையில் குடியிருப்பதை எதிர்த்து சென்னை, உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அதனால், ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் குழு அமைக்கப்பட்டது.

இது தொடர்பாக என்னுடைய கவனத்திற்கு அப்போதைய மாவட்ட ஆட்சியர் கொண்டுவந்தார். எனவே நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதால், அதனை நீதி மன்றத்தின் மூலம் தான் தீர்வு காண வேண்டும் என இந்த அமைப்பை உருவாக்கி, வழக்கை நடத்தினோம்.

இது நம்முடைய ஊரின் பிரச்சினை. இதில் அரசியல் கூடாது. நாம் அனைவரும் ஒன்று கூடி தீர்வு காண வேண்டும். வீடுகளை அகற்றுவதற்காக 1,535 குடும்பங்களுக்கு தற்போது நோட்டிஸ் வழங்கப்பட்டுள்ளது. எனவே, தனித் தனியாக வழக்கு நடத்துவதுதான் சரியாக இருக்கும் என வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.



அதனடிப்படையில், இதுவரை சம்மந்தப்பட்ட இடத்தில் குடியிருப்பதற்கான அரசு அளித்துள்ள ஆவணங்களை திரட்டி தயார் செய்யும் பணிகளை விரைவு படுத்தி இருக்கிறேன். இந்த வழக்கு மீண்டும் வரும் புதன் கிழமை விசாரணைக்கு வருகிறது. இந்த வழக்கில் சட்ட நுணுக்கங்கள் தெரிந்த வழக்கறிஞர்களை வைத்து வாதாட திட்டமிட்டிருக்கிறோம். நீதிமன்ற உத்தரவின் மூலம் விடுகள் இடிக்கும் நடவடிக்கை தடுத்து நிறுத்த முயற்சிகள் எடுத்து வருகிறோம்.

திருவண்ணாமலையில் 10ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு பட்டா வாங்கி கொடுத்திருகிறேன். தற்போது, சட்டப்பூர்வமாக இந்த வீடுகள் இடிக்கப்படுவதை தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம்.

இவ்வாறு அவர் பேசினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாநகர மேயர் நிர்மலா வேல்மாறன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர் செல்வம், மாநகர செயலாளர் ப.கார்த்தி வேல்மாறன், மாவட்ட துணைச் செயலாளர் பிரியா விஜயரங்கன், மாநகர துணை மேயர் சு.ராஜாங்கம், மாநில தொ.மு.ச., செயலாளர் க.சௌந்தரராசன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் இரா.கார்த்திகேயன், அமைப்புசாரா தொ.மு.ச., ஏ.ஏ.ஆறுமுகம் உட்பட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

நிறைவாக குடியிருப்போர் நலச்சங்க செயலாளரும், மாமன்ற உறுப்பினருமான ம.செந்தில் நன்றி கூறினார்.

## 'வாட்ஸ் அப்'பில் வலம் வருவது!

